**தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை - 2023**

--------------------------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையின் (''அதிகாரசபை'') 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டு கொள்கைகளிற்கான தகவல்கள் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்களுகளுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டம் ஆகியவற்றிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, அதிகாரசபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.தே.க.ச) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்தல் மற்றும் சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு சபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.
இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையினை பெற்றுக் கொள்ளும் போது மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்வதற்கு அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள ், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.
- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.
- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகாரசபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன்

தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல ் லை விஸ்தரிக்கப்பட்டுள ் ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக் கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,
- அதிகாரசபையின் கட்டுப்பாட்டுச் சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் அதிகாரசபை இணங்கியிருந்ததா என்பதும்,
- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்
- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் பெறுகை செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை**

| | குறித்த நியமத்தின் தொடர்புடனான இனக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 36 இன் 8 பந்திக்கு முரணாக மீளாய்வாண்டு இறுதியில் நிலவிய ஆதன பொறிகள் மற்றும் உபகரணங்களின் கொண்டு செல்லும் பெறுமானத்தின் கழிவு நட்டத்திற்கான ஏற்பாடாக ரூபா 2,045,756 தொகை குறைக்கப்பட்டிருந்தது. | அதிகாரசபையினால் 30 ஆண்டுகள் நீண்டகால வாடகை அடிப்படையில் பெற்றுக் கொண்ட நாஉள காணி மற்றும் கட்டிடத்திற்காக 2012 ஆண்டு முதல் கழிவு நட்டத்திற்கான ஏற்பாடு ஒதுக்கப்பட்டுள்ளது. 2026 ஆண்டில் வாடகை உடன்படிக்கை முடிவடைந்தன் பின்னர் குறித்த செம்மையாக்கல் நிதிக்கூற்றுக்களில் செய்யப்படும். | கணக்கீட்டுக் கொள்கைகளிற்கு இணங்க சொத்துக்களின் புத்தகப் பெறுமதி கொண்டு செல்லும் பெறுமதிக்கு கூடுதலாயின் மாத்திரம் கழிவு நட்டத்திற்கான ஏற்பாடு செய்ய வேண்டும். |

**(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 37**

| | | | |
|---|---|---|---|
| (i) | நியமத்தின் 14 பந்திக்கு முரணாக தீர்க்கப்படாத 05 வழக்குகளிற்குரியதாக எதிர் | எதிர்காலத்தில் இழப்பீடாக செலுத்த அதிக நிகழ்தகவு காணப்படும் எனும் | கணக்கீட்டு கொள்கையில் உள்ளடங்கும் |

| | | | |
|---|---|---|---|
| | தரப்பினரால் கோரியுள்ள இழப்பீட்டு பெறுமதி ரூபா 7,700,000 அட்டுறு செலவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | அடிப்படையில் கணக்கிட்டு ரூபா 7,700,000 ஆன எதிர்பார்த்த தொகைக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2023 திசெம்பர் 31 திகதிக்கும் இவற்றில் எவ்வித மாற்றமும் இடம்பெறாததால் தொடரந்தும் செலுத்த வேண்டிய செலவாக காண்பிக்கப்பட்டுள்ளது. | நிபந்தனைகளை பூர்த்தி செய்திருந்தால் மாத்திரம் எதிர்பாராத பொறுப்பிற்காக ஒதுக்கீடு செய்ய வேண்டும். |
| (ii) | நியமத்தின் 28 பந்தி பிரகாரம் இறந்தகால செயலொன்றின் விளைவாக ஏற்பட முடியுமான கட்பபாடு (Possible Obligation) ஆன, வழக்கு தொடர்பாக எதிர் தரப்பினரால் கொரியுள்ள இழப்பீட்டு தொகையான ரூபா 116,500,000 எதிர்பாரா பொறுப்பாக கணக்கீட்டு குறிப்பின் கீழ் வெளிப்படுத்தி இருக்கவில்லை. | எதிர்காலத்தில் இது தொடர்பாக குறிப்பின் ஊடாக வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். | எதிர்பாரா பொறுப்புகளை இனங்கண்டு கணக்கீட்டு நியம 37 இற்கு இணங்க வெளிப்படுத்த வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டு கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அதிகாரசபையின் கொள்கை பிரகாரம் சொத்துக்களிற்குரிய கழிவு நட்டத்திற்கான நட்டப் பெறுமதியை வருடாந்தம் மீளாய்வு செய்ய வேண்டிய போதும், ஏனைய சொத்துக்கள், பெறவேண்டியவைகள் மற்றும் வைப்புக்கள் மற்றும் முற்பணத்திற்காக முறையே ரூபா 200,000, ரூபா 1,407,972 மற்றும் ரூபா 1,433,947 தொகை ஆறு ஆண்டுகளிற்கு அதிக காலமாக கழிவுநட்ட பெறுமதி செம்மையாக்கப் படாது கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. | கழிவுநட்ட நட்டம் தொடர்பாக தர பரிட்சிப்பு செய்யப்பட்டு எதிர்காலத்தில் ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | அதிகாரசபையின் கணக்குக் கொள்கை பிரகாரம் கழிவுநட்ட பெறுமதியை வருடாந்தம் செம்மையாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | உலக வர்த்தக நிலைய 03 கடையறைகளை வாடகைக்கு வழங்கியதில் 2019 ஆண்டு வரை அறவிட வேண்டிய கடையறை வாடகை கூட்டுத் தொகை ரூபா 2,989,815 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | மீளாய்வாண்டலவில் உலக வர்த்தக நிலையத்தில் அமைந்துள்ள 03 நிறுவனங்களிற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்துள்ளதால், உடன்படிக்கை பிரகாரம் மற்றும் பெறவேண்டிய பெறுமதியை சட்டத் தீர்ப்பின் அடிப்படையிலாவதால், 2023 திசெம்பர் 31 திகதி பெறவேண்டிய | பெறவேண்டிய வருமானத்தை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | பெறுமதி குறிப்பிடப்படாததுடன், எதிர்வரும் ஆண்டில் குறித்த பெறவேண்டிய பெறுமதியை காண்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஆ) | கணக்காய்வின் கணக்கிடலின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 திகதி நிலையான வைப்பு மற்றும் திறைசேரி உண்டியல் பெற வேண்டிய வடடி ரூபா 16,568,170 தொகை கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | வட்டி வருமானம் கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டுள்ள நிலையான வைப்புக்களிற்காக 12 சதவீத வட்டியை தொடர்புபடுத்தி மற்றும் குறைத்து கணக்கிடப்பட்டுள்ள நிலையான வைப்புக்களிற்காக 10 சதவீத வட்டியை தொடர்புபடுத்தி பெறவேண்டிய பெறுமானம் கணக்கிடப்பட்டுள்ளது. | பெறவேண்டிய வருமானத்தை சரியாக கணக்கிட்டு கணக்கீடு செய்ய வேண்டும். |
| (இ) | சுற்றிவலைப்பிற்காக அன்பளிப்பாக வழங்க வேண்டிய ரூபா 62,483,470 தொகையை பொறுப்பாக காண்பிக்க வேண்டிய போதும், அத்தொகை இரத்தினக்கல் அன்பளிப்பு நிதியத்தின் பெயரில் உரிமைகளின் கீழ் நிதிக்கூற்றுக்களில் காண்பித்துள்ளதுடன் சுற்றிவலைப்பிற்காக தொடர்புபட்ட வெளித்தரப்பினரிற்கு இந்த அன்பளிப்புத் தொகையை பகிர்ந்தளித்திருக்கவில்லை. | இரத்தினக்கல் அன்பளிப்பு நிதியம் அதிகாரசபையின் நிதியத்தின் கீழ் வகைப்படுத்தியுள்ளதால், நிதிக்கூற்றுக்களில் உரிமையின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது. | செலுத்த வேண்டிய அன்பளிப்பு தொகை உரிமையாக இனங்காணப்பட வேண்டியதுடன் பொறுப்பாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். செலுத்த வேண்டிய அன்பளிப்பு தொகையை தாமதமின்றி செலுத்தி தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | உலக வர்த்தக நிலையத்தின் உறுதிப்படுத்தலின் பிரகாரம் அறவிட வேண்டிய வைப்புத் தொகை ருபா 16,368,300 ஆன போதும் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 15,802,290 ஆனதில் ரூபா 566.010 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | உலக வர்த்தக நிலைய கம்பனியிடமிருந்து அறவிடவுள்ள ரூபா 16,368,300 தொகையை வைப்புத் தொகைக்குரியவாறு நிதிக்கூற்றுக்களில் நானாவித வைப்பு மீதியை எதிர்காலத்தில் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | சரியான பெறுமதியை உறுதி செய்து கொண்டு கணக்கு தயாரிக்கப்பட வேண்டும். |
| (உ) | நிறுத்தி வைத்தல் வரி செலுத்தும் போது அதனை சுரங்கங்கள் வைப்பு பொறுப்பு கணக்கிற்கு கணக்கீடு செய்த தவறை சரிசெய்யும் குறிப்பு இரண்டு முறை இட்டுள்ள காரணத்தால் 2023 திசெம்பர் 31 திகதியன்று ரூபா 8,298,412 ஆன செலுத்த வேண்டிய நிறுத்தல் வைப்பு வரி குறைவாக மற்றும் சுரங்கங்கள் வைப்பு கூடுதலாகவும் காண்பிக்கப்பட்டுள்ளது. | 2024 கணக்காண்டின் போது சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | குறித்த சீராக்கம் சரியாக செய்யப்பட வேண்டும். |

### 1.5.4 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

| விடயம் | தொகை (ரூபா) | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| i. வட்டி வருமானம் | 451,383,305 | அட்டவணை | i. உரிய அட்டவணை குறிப்புக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டதுடன் மீண்டும் சமர்ப்பிக்கிறேன். | வட்டி வருமானம் கணக்கிடும் அட்டவணையை சமர்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| ii. 10 சதவீத நிறுத்தி வைத்தல் | 2,568,873 | | ii. 2009 சனவரி 01 திகதிக்கு முன்னர் நிறுத்தி வைத்த மீதிகள் பற்றி தகவல்களை 2023 ஆண்டில் வெளிப்படுத்திக் கொள்ள முடியாததுடன் 2024 ஆண்டில் அந்த மீதிகளை வெளிப்படுத்தி சமர்பபிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | நிறுத்தி வைத்த மீதிகள் தொடர்பாக விரிவான தகவல்களை சமர்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| iii. வைப்பு மற்றும் முற்பணம் | 132,928,418 | | iii. நிலப் பங்கு வைப்பு தொடர்பான தகவல்களை உரிய பிராந்திய அலுவலக நிலப் பங்கு பதிவேடுகளைச் பரீட்சிப்பதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம். உலக வர்த்தக நிலையத்தில் பாதுகாப்பு வைப்பு மற்றும் வாடகை வைப்புத்தொகை தொடர்பான அட்டவணைகளை சரி செய்து வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். | வைப்பு மற்றும் முற்பணம் தொடர்பான அட்டவணையை கணக்காய்விற்கு சமர்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| | **586,880,596** | | | |

### 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்தத வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அதிகாரசபையினால் உலக வர்த்தக நிலையத்தில் கடையறைகளை வாடகைக்கு பெற்றுக் கொள்ள உடன்பட்டிருந்த வாடகை உடன்படிக்கை 2021 ஒக்டோபர் 31 திகதி முடிவுறுத்தப்பட்டிருந்தது. அவ்வாறாயினும், வழங்கியிருந்த ரூபா 16,368,300 ஆன பாதுகாப்பு பிணை வைப்பை 2024 பெப்ரவரி 28 | உலக வர்த்தக மையத்தில் அமைந்துள்ள இலங்கை இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரண பரிமாற்ற நிலையத்திற்காக கம்பனியுடன் ஏற்படுத்திக்கொண்டிருந்த குத்தகை ஒப்பந்தம் 2021 ஒக்டோபர் 31 ஆம் திகதி முடிவுறுத்தப்பட்டது. | பாதுகாப்பு பிணை வைப்பை மீள் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| திகதி வரை அறவிட்டிருக்கவில்லை. | அவ்வாறாயினும், ரூபா 16,368,300 ஆன பாதுகாப்பு வைப்புத் தொகையை விடுவிக்க அனைத்து கடைகளும் சீரான உடமையுடன் நிறுவனத்திடம் கொடுத்திருக்க வேண்டிய போதும் ஒரு கடைக்கு நீதிமன்றத்தினால் கடையை ஒப்படைக்குமாறும், நிலுவைத் தொகையை வழங்கவும் கட்டளைவிட்டுள்ள போதும் கடை உரிமையாளரினால் நீதிமன்ற கட்டளை பிரகாரம் இதுவரை செயற்பட்டிருக்கவில்லை. | |

**1.6.2 செலுத்தத வேண்டிய பணம்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| நானாவித கடன்கொடுனரில் ரூபா 64,447,721 ஆன செலுத்த வேண்டிய மீதி 05 ஆண்டுகளிற்கு அதிக காலமாக தீர்க்கப்படாது காணப்பட்டது. | தோட்ட கம்பனிகளின் இரத்தினக்கல் காணி ஏலவிற்பனை மற்றும் நானாவித இரத்தினக்கல் அரிப்பு கருத்திட்டங்களில் இருந்து கிடைத்த வருமானத்தால் நானாவித கடன்கொடுனர்களிற்கு செலுத்த வேண்டிய தொகை தொடர்பாக எழுந்துள்ள சட்ட பிரச்சினையின் மீது இக் கொடுப்பனவு இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. இந்த சட்ட பிரச்சினை தீர்ந்த உடனே இந்த கொடுப்பனவுகளை தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படும். | கடன் கொடுனர் மீதிகளை விரைவில் தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | **சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு** | **இணக்கமின்மை** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|---|
| (அ) | 1993 இன் 50 இலக்க தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை சட்டம் | | | |
| | i. 15(1) பிரிவு | இப் பிரிவின் பிரகாரம் இலங்கையினுள் இரத்தின்கல் கைத்தொழிலை | இங்கு அதிகாரசபையினால் இரத்தினக்கல் அரிப்பை மேற்கொள்ளாததுடன் மூன்றாம் தரப்பினர் (பிரிவின் சமுர்தி | சட்ட ஏற்பாடுகள் பிரகாரம் அதிகாரசபையி |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொண்டு செல்ல அனுமதிப்பத்திரம் வழங்குவது தொடர்பான பொறுப்புவாயந்த ஒரே அதிகாரி தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை ஆகையால் இரத்தினக்கல் கைத்தொழிலிற்குரிய பிரதான ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை மூன்றாம் தரப்பினருடன் நேரடியாக இரத்தினக்கல் அரிப்பு கருத்திட்டங்களில் ஈடுபடுவது சட்டத்திற்கு முரணானது என சட்டமா அதிபர் திணைக்களத்தினால் அறிவித்துள்ள போதும் மீளாய்வாண்டினுள் இரத்தினக்கல் அரிப்பு கருத்திட்டமொன்று செயற்படுத்தப்பட்டிருந்தது. | சமுதாய அடிப்படை சங்கம்) இனால் மேற்கொள்ளும் நடவடிக்கைகளை மேற்பார்வை மற்றும் சட்டத்தின் 18 (2) பிரிவின் பிரகாரம் கிடைக்கும் இரத்தினக்கற்களை உரியவாறு பொறுக்கொண்டு ஏலத்திலிட்டு குறித்த அரச பங்கை பெற்றுக் கொள்வதனை மாத்திரம் பணிப்பாளர் சபை அங்கீகரித்துடன் அதிகாரசபையினால் மேற்கொள்ளப்படுகிறது. குறித்த விடயம் தொடர்பாக பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்ட போதும் இறுதியில் அதிகாரசபையினால் நேரடி இரத்தினக்கல் அரிப்பு நடவடிக்கையில் ஈடுபடாது 15 (1) பிரிவின் பிரகாரம் மூன்றாம் தரப்பினரிற்கு இரத்தினக்கல் அரிக்கும் அனுமதிப்பத்திரத்தை விநியோகித்து கிடைக்கும் இரத்தினக்கற்களில் 18 (2) பிரிவின் பிரகாரம் அரச பங்கை அறவிடுவது தொடர்பாக உடன்படிக்கை செய்து செயற்படுவதில் தடையில்லையென சட்டமா அதிபர் திணைக்களத்தினால் பரந்துரை வழங்கப்பட்டுள்ளது. | னால் நேரடியாக இரத்தினக்கல் அரிப்பு நடவடிக்கையில் ஈடுபடக் கூடாது. |
| ii. 15 (2) பிரிவு | இரத்தினக்கல் பரீட்சிப்பு மற்றும் சான்றிதழ் வழங்குதலிற்காக நடாத்திச் செல்லும் தனியார் இரசாயனகூடங்களை பதிவு செய்ய மற்றும் ஒழங்குபடுத்த ஒழுங்கு முறை தயாரிக்கப்பட்டு இருக்கவில்லை. | வர்த்தமானி வரைவு அமைச்சின் செயலாளர் கையொப்பத்துடன் தமிழ் மற்றும் ஆங்கில மொழி பெயர்ப்புடன் 2023 நவம்பர் 17 திகதி சட்ட நகழ் உருவாக்குனரிற்று அனுப்பப்பட்டுள்ளது. சட்ட பிரச்சினைகளை தீர்த்துக் கொண்ட பின்னர் வர்த்தமானியை பிரசுரித்து இரத்தினக்கல் இரசாயனகூடங்களை பதிவு செய்ய அனுமதிப்பத்திரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். | சட்ட ஏற்பாடுகள் பிரகாரம் இரத்தினக்கல் பரீட்சிப்பு இரசாயனகூடங்களை பதிவு செய்ய மற்றும் ஒழுங்குபடுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| iii. 20(1) மற்றும் 20(2) பிரிவு | அதிகாரசபையின் அதிகாரம் பணிகள் மற்றும் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தும் | அதிகாரசபையினால் நடாத்திச் செல்லப்படும் இரத்தினக்கல் அன்பளிப்பு நிதியம் மற்றும் இரத்தினக்கல் அரிப்ப நலன்புரி நிதியங்களின் தகவல்கள் | சட்ட ஏற்பாடுகள் பிரகாரம் கிடைக்கும் பணத்தை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | போது மற்றும் மேற்கொள்ளும் போது அதிகாரசபைக்கு கிடைக்கும் பணம் மற்றும் அன்பளிப்புக்களை பிரதான நிதியத்திற்கு செலவு வைக்க வேண்டிய போதும், அதற்கு மாற்றமாக 2023 திசெம்பர் 31 திகதி இரத்தினக்கல் அன்பளிப்பு மற்றும் இரத்தினக்கல் அரிப்பு நலன்புரி நிதியம் ஆகிய இரண்டிற்கும் நிதி செலவு வைத்ததில் முறையே ரூபா 62,483,470 மற்றும் ரூபா 38,126,472 ஆன மீதி காணப்பட்டது. | ஒவ்வொரு காலாண்டிலும் பொது திறைசேரிக்கு வழங்கப்படுகின்றது. | அதிகாரசபையின் நிதியத்திற்கு செலவு வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2017 இன் 24 இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்தின் இலக்கம் 86 மற்றும் உள்நாட்டு இறைவரி திணைக்கள ஆணையாளரின் இலக்கம் SEC/2022/E/03 மற்றும் 2022 திசெம்பர் 23 திகதிய நிறுத்தி வைத்தல் உப முகவர்களிற்கு விடுவித்த நிறுத்தி வைத்தல் வரி மற்றும் முற்பண கழிப்பனவு சுற்றறிக்கையின் இலக்கம் 06 பந்தி | ஒவ்வொரு நிறுத்த வைத்தல்களும் உப முகவரினால் திரட்டப்பட்டு நிறுத்தி வைத்தல் வரி ஒவ்வொரு மாதமும் முடிவடைந்து 15 நாட்களிற்குள் உள்நாட்டு இறைவரித் ஆணையாளரிற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டியிருந்த போதும், அதிகாரசபையினால் 2023 நவம்பர் 30 வரை திரட்டிய நிறுத்தி வைத்தல் வரி ரூபா 690,476,013 தொகை மீளாய்வாண்டு இறுதி வரை அனுப்ப நடவ஡ிக்கை எடுத்திருக்கவில்லை. | 2023 ஆண்டிற்குரிய நிறுத்தி வைத்தல் வரி (இரத்தினக்கல் ஏலவிற்பனைக்காக 2.5 சதவீத நிறுத்தல் வரி தவிர) அடுத்து வரும் மாதத்தின் 15 திகதிக்கு முன்னர் செலுத்தப்பட்டுள்ளது. இரத்தினக்கல் ஏலவிற்பனைக்கான 2.5 சதவீத நிறுத்தல் வரி இன்வொயிஸ் பத்திரம் உரிய பிராந்திய அலுவலகத்திடமிருந்து கிடைத்த பின்னர் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் எதிர்காலத்தில் கவனத்திற் கொள்ளப்படும் காலப் பகுதியில் செலுத்த நடவடிக்கை எடுக்கப்படும். | உள்நாட்டு இறைவரி சட்டத்தின் பிரகாரம் நிறுத்தி வைத்தல் வரி அனுப்ப நடடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 995,430,030 ஆன் இலாபமாக காணப்பட்டதுடன் அதற்கு நெரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 425,741,708 அனது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 569,682,322 ஆன வளர்ச்சி

அவதானிக்கப்பட்டது. காலப்பகுதியினுள் நிருவாக செலுவுகள் ரூபா 58,987,235 இனால் அதிகரித்திருந்த போதும் இரத்தினக்கல் காணி ஏலவிற்பனை வருமானம் ரூபா 202,121,358 இனால் மற்றும் வட்டி வருமானம் ரூபா 323,065,776 இனால் அதிகரித்தமை இந்த வருடத்தில் இலாப வளர்சிக்கு பிரதான காரணமாகக் காணப்பட்டது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1993 இன் 50 இலக்க தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண சட்டத்தை காலரீதியாக திருத்திக் கொள்ள மீளாய்வாண்டில் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 203 ஜுலை 06 திகதிய நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சினால் தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண சட்டத்தை மற்றும் சுரங்க மற்றும் கணிப்பொருட்கள் சட்டைத்தை இரத்துச் செய்து அதற்கு பதிலாக ஒழுங்குபடுத்தல் செயற்பாடுகளை மேற்கொள்ளல், ஆராயச்சி மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகள் தொடர்பாக புதிய இரண்டு நிறுவனங்கள் மற்றும் அதற்குரிய சட்டரீதியா சட்டங்களை அறிமுகம் செய்யவதற்காக அமைச்சரவை விஞ்ஞாபனமொன்று சமர்பிக்கப்பட்டுள்ளது. அதனால் 1993 இன் 50 இலக்க தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை சட்டத்தை திருத்த தேவையில்லையென நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சினால் தமது அவதானிப்பின் மூலம் குறிப்பிட்டுள்ளதால் அதற்கு இணங்க செயற்பாடுமாறு கைத்தொழில் அமைச்சின் செயலாளரிற்கு கட்டளை இட இலக்கம் அப/23/1392/617/029 மற்றும் 2023 ஆகஸ்ட் 15 திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக ஆரம்ப கைத்தொழில் அமைச்சின் சிரேஸ்ட் உதவி செயலாளரினால் இலக்கம் SMG/ADM/03/01/05 மற்றும் 2023.10.04 திகதிய கடிதம் மூலம் அதிகாரசபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | குறித்த அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு இதுவரை அங்கீகாரம் கிடைக்காததால் தற்போது நடைமுறையிலுள்ள சட்டத்தை காலரீதியாக திருத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | கிரயம் ரூபா 9,724,501 பெறுமதியான இரத்தினக்கல் வெப்பமேற்றுவதனை இனங்காணும் FTIR இரண்டு இயந்திரங்கள் முறையற்ற முகாமைத்துவ காரணமாக பயன்படுத்த முடியாத நிலையில் காணப்பட்டன. | இரண்டு FTIR இயந்திரங்களும் கொழும்பு இரத்தினக்கல் இரசாயணகூடத்தில் மற்றும் இரத்திரனபுரி இரசாயனகூடத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் இந்த இரண்டு இயந்திரங்களும் ஒழுங்காக செய்பாடாத போதும் அதன் இருப்பிற்காக கட்டாய தேவைப்பாடொன்றாக சரியான வெப்பநிலை வழங்குவதற்காக | சொத்துக்களை உரிய செயற்பாட்டு நிலையில் பேணிக் கொண்டு இயக்க நடவடிக்கைகளிற்காக பயன்படுத்த வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | | பொருத்தமான உபகரணமொன்றை நிருவாக பிரிவினால் வழங்க வேண்டிய சேவையாகும். அதனால் 24 மணித்தயாலமும் இந்த இரண்டு இயந்திரங்களிற்காக வாயு மதனாக்கி வசதியை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (இ) | முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் அங்கீகரித்த ஆட்சேர்பபு திட்டத்தின் பிரகாரம் தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையின் அனைத்து நிருவாக, நிதி மற்றும் ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகள் தொடர்பாக தலைவருக்கு உதவுதல் உள்ளடங்களாக அதிக பொறுப்பு பகுதியொன்றை கொண்ட பணிப்பாளர் நாயக பதவிக்கு 2013 ஆண்டு முதல் 2023 ஆண்டு வரை 10 ஆண்டுகளிற்கு அதிக காலம் நிரந்தர அடிப்படையில் அலுவலர் ஒருவை ஆட்சேர்த்திருக்கவில்லை. | 2022 திசெம்பர் 09 ஆம் திகதி பணிப்பாளர் நாயக பதவி வெற்றிடத்தை நிரப்ப நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டது. எனினும் அங்கு முன்வந்த விண்ணப்பதாரர்கள் தொடர்பில் நேர்முக பரீட்சை சபை திருப்த்தியடையாத காரணத்தால் அந்த நேர்முகப் பரீட்சை தோல்விடைந்தது. அதனால் இரண்டாம் நிலை மற்றும் ஒப்பந்த அடிப்படையில் 2013 ஆண்டு முதல் 2024 ஆண்டு வரை 12 அலுவலர்கள் அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் பதவிக்கு நியமித்தல் விடயப் பொறுப்பு அமைச்சரிற்கு அதிகாரசபை சட்டத்தினால் ஒப்படைத்துள்ள அதிகாரத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. | ஆட்சேர்ப்பு திட்டத்தில் தேவையான திருத்தங்களை மேற்கொண்டு பணிப்பாளர் நாயகம் பதிவியை நிரந்தரமாக நிரப்பிக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்த்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையின் 2018 ஆகஸ்ட் 29 திகதிய உள்ளக சுற்றறிக்கை இலக்கம் NGJA/16.2/2018/Bachoc iii இன் 07 பந்தியின் பிரகாரம் இரத்தின அகழ்வு மற்றும் அறித்ததன் பின்னர் நிலத்தை சுமுகப்படுத்தி பிணை தொகையை கோர வேண்டிய போதும், அவ்வாறு செய்யாது ஆபத்தானதாக மற்றும் சுற்றாடலிற்கு தீங்கு ஏற்படும் விதமாக கைவிடப்பட்டுள்ள ஆபத்தான சுரங்கங்களின் அனுமதிப்பத்திரம் காலாவதியாக 02 மாதங்களின் பின்னர் அதிகாரசபையினால் மூடப்பட்டு சுமுகமாக்க வேண்டிய போதும், மாதிரி பரிசோதனையின் போது அவ்வாறு மூடப்படாத 19 சுரங்கங்கள் அவதானிக்கப்பட்டன. | இவை தற்போது 10 வருடங்களிற்கு முன்னர் இரத்தின அரிப்பதற்கு மேலதிகமாக பல்வேறு விடயங்களிற்காக (மணல்/மண்) பயன்படுத்திய காணிகளாவதுடன் அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொண்ட குறித்த நபர்கள் பற்றிய தகவல்கள் அதிகாரசபையிடம் இருக்கவில்லை எனவும் ஆவண பரீட்சிப்பின் போது அவதானிக்கப்பட்டுள்ளது. அந்த குழிகளை மூடி முன்நடவடிக்கை எடுக்க குறித்த பிரிவிற்கு அனுப்பப்பட்டுள்ளது. | சட்டத்தின் ஏற்பாடுகள் பிரகாரம் சுரங்கங்களை மூடி குறித்த நிலத்தை உரியவாறு மறுசீரமைக்க வேண்டும். அதற்காக போதிய பிணைத் தொகையை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | இரத்தின அரிப்பு அனுமதிப்பத்திரம் விநியோகிக்கும் போது அகழ்வு செய்யப்படும் இரத்தினக்கல் சுரங்கங்களை மீண்டும் நிரப்பி மறுசீரமைப்பதற்காக விஷேட காப்பு பிணை அறவிடப்படுவதுடன் மீளாய்வாண்டு இறுதி வரை சுரங்க அகழ்வாளர்களினால் பல சந்தர்ப்பங்களில் வைப்புச் செய்து மீள் பெற்றுக் கொள்ளாத காப்பு பிணை வைப்புப் பெறுமதி ரூபா 1,377,385,852 ஆன காரணத்தால் உரியவாறு இரத்தினக்கல் சுரங்கங்களை மூடி குறித்த நிலத்தை சரியானவாறு மறுசீரமைப்பது தொடர்பாக சரியான ஒழுங்குபடுத்தல் இடம்பெறவில்லை என கணக்காய்வின் போது சர்ச்சைக்குரியதாக இருந்தது. | பாரம்பரிய சுரங்கங்களிற்கு அறவிடப்படும் பிணைத் தொகை இந்த மீதியில் காண்பிக்கப்படுவதுடன் அது 2023.03.22 திகதி முதல் ஒரு சுரங்கத்திற்கு ரூபா 10,000 தொகையும் இதற்கு முன்னைய ஆண்டுகளில் ஒரு சுரங்கத்திற்காக ரூபா 4,500 தொகையுமாக அறவிடப்பட்டது. இவ்வாறு அறவிடப்படும் பிணைத் தொகை மிகக் குறைந்த பெறுமானத்தை எடுப்பதால் சுரங்கதாரர்களினால் பாரம்பரிய சுரங்கங்களை மூடிவிடுகின்ற போதும் பிணைத் தொகையை மீள் கோராததால் இவ்வாறு மீதியாக காணப்படுகின்றது. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் இரத்தினக்கல் சுரங்கங்களை மூடி குறித்த நிலத்தை உரியவாறு மறுசீரமைக்க வேண்டும். அதற்காக போதிய பிணைத் தொகையை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.3 விளைவற்ற மற்றும் குறைப் பயன்பாட்டு ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பெலிதெனியவில், கிரயம் ரூபா 889,000 ஆன காணி மற்றும் கிரயம் ரூபா 5,358,507 ஆன கட்டிடம் 12 வருடங்களிற்கு அதிக காலமாக எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்காது விளைவற்று காணப்பட்டது. | 2024 திசெம்பர் 31 திகதி பணிப்பாளர் சபைக்கு முன்வைக்கப்பட்ட இலக்கம் 2430 கொண்ட நிறைவேற்று பத்திரம் பிரகாரம் பெலிதெனிய காணி மற்றும் கட்டிடத்தை இரத்தினக்கல் மற்றும் ஆபரண ஆராய்சி பயிற்சி நிறுவன தலைவரினால் அந்நிறுவன பயன்பாட்டிற்து பெற்றுத் தருமாறு உத்தேசித்துள்ளார். | இந்த சொத்தை ஆக்கபூர்வ செய்பாடுகளிற்கு பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.4 கருத்திட்ட தாமதங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| அதிகாரசபையினால் ரூபா 19 மில்லியன் கிரயமான மென்பொருள் தொகுதி ஒன்றை அமைக்க 2016 ஆண்டில் மென்பொருள் வழங்கல் கம்பனி ஒன்றுடன் உடன்படிக்கை செய்து 2021 ஆண்டு வரை ரூபா 10,450,000 செலுத்தியிருந்தது. உடன்படிக்கை செய்து 07 ஆண்டுகளிற்கு அதிக காலம் கடந்துள்ள போதும் மீளாய்வாண்டு இறுதி வரை மென்பொருள் தொகுதயை அமைத்து முடித்திருக்கவில்லை. | மென்பொருள் அபிவிருத்தி நிறுவனம் 31/12/2023 திகதி மென்பொருளின் அனைத்து பாகங்களையும் அபிவிருத்தி செய்து முடித்துள்ளதாக அறிவித்துள்ளது. அதிகாரசபையின் கணனி பிரிவினால் ERP மென்பொருள் செயற்படுத்தப்படும் அனைத்து பிரிவு தலைவர்களினதும் மென்பொருள் செயற்பாடு மற்றும் ஆரம்ப அளவுத் திட்டங்களிறகு இணங்குதல் தொடர்பில் அறிகை பெறப்பட்டுள்ளது. அபிவிருத்தி செய்யப்படாத பகுதிகளிற்காக 90 நாட்கள் காலாவகாசம் கோரப்பட்டுள்ளது. | கிரய அதிகரிப்பு, தொகுதியின் காலாவதி மற்றும் செலவிட்ட தொகைக்கு நலன்கள் கிடைக்காமை போன்ற காரணங்களினால் குறித்த மென் பொருள் தொகுதியின் நடவடிக்கைகளை விரைவில் முடிவுறுத்துவது தேவையாகும். |